# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 14 திங்கட்கிழமை 27.05.2024 கதிர் 269







# சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதி ரணிலின் பதவிக் காலத்தை 5 வருடங்களால் நீடிக்க ஆராய்வு!

## ஜனாதிபதித் தேர்தலை நடத்தாதிருக்க திட்டமாம்



**அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ள நிலையில் அதனை தவிர்த்து சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலத்தை மேலும் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கக் கூடிய சாத்தியங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கலந்துரையாடியுள்ளதாக நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**குறிப்பாக ஜூன் இரண்டாம் வாரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாத அளவுக்கு அக்கட்சியினுள் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதன்படி, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகிய இருவரின் மொட்டு கட்சியின் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் எழுந்துள்ள நெருக்கடியில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நீடிக்க வைப்பதன் மூலம் பல அம்சங்களில் தீர்வுகளை காணக்கூடியதாக இருக்கும் என்பதே ஆளுந்தரப்பின் பெரும்பான்மையானவர்களின் கருத்தாக உள்ளது.**

2➤

## ஜனாதிபதி ரணில் இப்போதே தீர்மானமொன்றை மேற்கொண்டால் அது எமக்கு இலகுவாக இருக்கும்!

### பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா? என்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கக தீர்மானித்த பின்னர், ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கும் தரப்பினர் அதனை அறிவித்தால், அது தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஏற்பாடுகள் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்தப் போவதாக ஜனாதிபதி அமைச்சரவைக்கு அறிவித்துள்ள போதிலும், இத்தேர்தலில் போட்டியிடப்போவதாக ஜனாதிபதி இதுவரை அறிவிக்கவில்லை எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளதால்,

2➤

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் சர்ச்சைகளுக்கு தீர்வு காண ஜூன் மாதம் 9ஆம் திகதி கருத்தரங்கு!

### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காணும் நோக்கில், எதிர்வரும் ஜ/ன் மாதம் 9ஆம் திகதி கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று காலை யாழ் ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என தமிழரசு கட்சி இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்றும் எம்.ஏ சுமந்திரன் குறிப்பிட்டார்.

அத்துடன், இறுதிக் கட்ட யுத்ததின்போது

2➤

## சஜித் பிரேமதாச மீதான மக்கள் ஆதரவு பெருகி வருகின்றது! தமிழ் – முஸ்லிம் வாக்குகளும் அவர் பக்கம் திரும்புகின்றது

### கணக்கெடுப்புகள் காட்டுவதாக திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவிப்பு




இதுவரை வெளியாகியுள்ள கணக்கெடுப்புகளின் படி சஜித் பிரேமதாசவே நாட்டில் அதிக செல்வாக்கு பெற்றவர் எனவும், மொட்டு கட்சியினதும், ஜே.வி.பி. கட்சியினதும் உறுப்பினர்கள் பலர் சஜித் பிரேமதாசவுடன் மாகாண மட்டத்தில் அதிக எண்ணிக்கையில் இணைந்து வருவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்– "ஆரம்பத்தில் மொட்டு கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து வந்த போது தேசிய மக்கள் சக்தி ஒன்றே மாற்று வழி என நினைத்த வாக்காளர்கள் பலர் தற்போது உண்மை நிலையை புரிந்து கொண்டு சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து வருகின்றனர்.

ஆரம்பத்தில் ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்திக்கு அலையாக வந்த வாக்குகள் தற்போது மீண்டும் மொட்டு கட்சியை நோக்கியும், பெரும்பாலானவர்கள் மெல்ல மெல்ல ஐக்கிய மக்கள் சக்தியை நோக்கியும் நகர்ந்து வருகின்றனர்.

மேலும், கடந்த தேர்தலில் ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தி பெற்ற 4 லட்சம் வாக்குகளை 50மூ ஆக அதிகரிப்பதாயின் அவர்கள் 70 லட்சம் வாக்குகளை பெற வேண்டும், இவ்வளவு வாக்குகளை அதிகரிப்பது யதார்த்தத்திற்கு மாறானது என்பதால், அவர்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைக்கப் போவதில்லை.

இதேவேளை தமிழ், முஸ்லிம் வாக்குகள் விரைவாக ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்புவதையும் காண முடிகின்றது, இதனால் அனைத்து வாக்குகளிலும் ஐக்கிய மக்கள் சக்தியே அதிக சதவீத வாக்குகளைப் பெறும் வாய்ப்பு உள்ளது. சஜித் பிரேமதாச மக்களுக்கு செய்கின்ற நடைமுறைச் சேவையினாலும், மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுப்பதினாலும் கிராமிய மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளமையின் காரணமாகவே மக்களின் ஆதரவு அவருக்கு பெருகி வருகின்றது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லாதவர்களை கட்சிக்கு இணைத்துக்கொள்ளும் வகையில் அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் மற்றுமொரு பிரச்சார

2➤

## 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடரும்!

சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலை காரணமாக 11,949 குடும்பங்களைச் சேர்ந்த 44,627 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்தமுகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

2➤

## 7 மாவட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மத்திய மலையகத்தின் மேற்கு சரிவுகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக காசல்ரீ, மவுஸ ாகலை மற்றும் மேல் கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித துள்ளனர்.

இதன்காரணமாக, செயின்ட் கிளேர் மற்றும் டெவோன் ஆகிய நீழ்வீழ்ச்சிகளின் நீர் கொள்ளளவு அதிகரித்துள்ளது. அத்துடன் விமலசுரேந்திர, கனியன், லக்சபான, நியூ லக்சபான, பொல்பிட்டிய நீர்மின் நிலையங்களில் மின் உற்பத்தி அதிகபட்ச கொள்ளளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மின் உற்பத்தி நிலையப் பொறியியலாளர்கள் குறிப்பிட்டனர்.

## சஜித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம், அதன் மூலம் மேலும் 20 இலட்சம் அதிகமான வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது" என்றார். (ரெம-96)

## சர்வஜன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவோ உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடாதது இதற்கு சிறந்த உதாரணம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1977 இல், நாடாளுமன்றத்தில் 6 இல் 5 அதிகாரத்தை கொண்டிருந்த ஜே.ஆர். ஜெயவர்தன 1982 இல் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்கள் நீடித்து, நாடாளுமன்றத்தை பத்து வருடங்களாக நீடித்திருந்தமை குறித்து ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போதைய சந்தர்ப்பத்திலும், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்ஹ சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வதில் சில அனுகூலங்கள் இருப்பதாகவும், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வதற்கு நாடாளுமன்றத்தின் 3 இல் 2 பெரும்பான்மை தேவையாக உள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கீழுள்ள நாடாளுமன்றத்தில் தற்போது பல சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அதன்படி சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதாகவும் மேற்படி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் எதிர்வரும் நொவம்பர் மாதம் 17ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், புதிய ஜனாதிபதியொருவர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டியுள்ள நிலையில், இத்தகைய அரசியலமைப்பு நிலைமை குறித்து சட்டத் துறைகளில் பல்வேறு வகையிலும் விவாதங்கள் நடந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரெம-94)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் போட்டியிட்டால், அமைச்சரவையின் இரண்டு பிரதிநிதிகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்ற ரீதியில் அது குறித்து விரிவாக ஆராய்வதற்கான அவகாசம் கிட்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-95)

## ஜனாதிபதித் தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற பொறிமுறையின் ஊடாக தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்ததாகவும், ஆனால் சர்வதேசப் பொறிமுறையா? அல்லது கலப்புப் பொறிமுறையா? என்பது தொடர்பான நிலைப்பாட்டினை அவர் தெரிவிக்கவில்லை, என்றும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (04)



# ஆவரங்கால் சிவன் கோவிலில் உண்டியல் உடைத்தவர் கைது!

யாழ்ப்பாணம் ஆவரங்கால் சிவன் கோவிலில் உண்டியலை உடைத்துத் திருட்டில் ஈடுபட்ட ஒருவர் நேற்று இரவு கைதுசெய்யப்பட்டார்.

குறித்த ஆலயத்தில் திருடிவிட்டு மற்றொரு ஆலயத்தில் திருட முற்பட்ட போதே குறித்த நபர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து திருடப்பட்ட பணமும் சில பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகளுக்குப் பின்னர், சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (01)

# புலமைப்பரிசில் பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்கள்!

## இன்று முதல் ஏற்கப்படுகின்றன

புலமைப்பரிசில் பரீட்சைக்கான இணையவழி ஊடாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரை இணைய வழிமுறையின் ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் சிக்கல்கள் இருப்பின் பரீட்சைத் திணைக்களத்தின் அவசர இலக்கமான 1911 அல்லது 011-2 784537, 0112 786616, 0112 784208 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு, 5ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# இந்தியாவில் கைதான இலங்கையர்களுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பா?

இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய இலங்கையர்களுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் தொடர்பு இருப்பதான தகவல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடுவெல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தியா மீது தாக்குதல் நடத்தச் சென்றபோது கைது செய்யப்பட்ட நான்கு ஐ.எஸ் உறுப்பினர்களில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் ஒருவரும் உள்ளதாக ஊடகங்கள் சந்தேகம் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# ‘சர்வ ஜன பலய’ அரசியல் கூட்டணி எழுத்துமூல ஒப்பந்தம் கைச்சாத்து!

‘சர்வ ஜன பலய’ என்ற புதிய அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான எழுத்துமூல ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

“ஒன்றுபட்ட நாடு - மகிழ்ச்சியான தேசம்” என்ற தொனிப்பொருளில் ‘சர்வ ஜன பலய’ என்ற இந்த புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ், உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமய, திலித் ஜயவீர தலைமையிலான மவ்பிம ஜனதா கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகியன இந்தப் புதிய அரசியல் கூட்டணி ஒப்பந்தத்தில் கையெழுத்திடடுள்ளன. (04)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஆசியப் பிராந்தியத்தில் காற்பந்துத்துறையினை வலுப்படுத்த 19 வயதிற்குட்பட்டோருக்கான காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

## லைக்கா ஞானம் அறக்கட்டளையுடன் இணைந்து இலங்கைக் கால்பந்து சம்மேளனம் முன்னெடுப்பு!




லைக்கா ஞானம் அறக்கட்டளையுடன் இணைந்து இலங்கை கால்பந்து சம்மேளனம் இலங்கையின் காற்பந்தாட்டத் துறையில் ஒரு புதிய மைல்கல்லினை அடையும் முயற்சியாக, 19 வயதிற்குட்பட்டவர்களுக்கான காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் போட்டிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு கொழும்பு, தாஜ்சமுத்ரா ஹொட்டலில் இன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் லைக்கா குழுமத்தின் ஸ்தாபகத் தலைவரும், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் இணை நிறுவுனருமான அல்லிராஜா சுபாஸ்கரன், லைக்கா ஹெல்த்தின் தலைவரும் லைக்கா ஞானம் அறக்கட்டளையின் இணை நிறுவுனருமான பிரேமா சுபாஸ்கரன், லைக்கா குழுமத்தின் பிரதித் தலைவர் பிரேம் சிவசாமி, இலங்கைக் காற்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் மற்றும் லைக்கா குழுமத்தின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக லைக்கா ஞானம் அறக்கட்டளையுடன் இணைந்து இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் பல விபரங்கள் பகிரப்பட்டுள்ளன.

ஆசியப் பிராந்தியத்தில் காற்பந்துத்துறையினை உயர்தரத்தில் வலுப்படுத்தும் நோக்கில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தொழில்முறை வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களை இணைத்துக்கொண்டு இளம் வீரர்கள் தேசிய அணியை அடைய தெளிவான பாதையை வழங்குவதை, குறித்த செயற்றிட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தில் நாடளாவிய ரீதியில் 55 நகரங்களில் இருந்து 19 வயதிற்குட்பட்ட 440 அணிகள் பங்கேற்கவுள்ளதுடன், குறித்த சுற்றுப்போட்டியில் முதற் கட்டத்தில் 11,000 வீரர்கள், 2,500 விளையாட்டுக் கழகங்களின் அதிகாரிகள், 1,000க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் மற்றும் நடுவர்கள் பங்குபெறவுள்ளனர்.

போட்டியின் இறுதிக் கட்டம் 24 மாவட்ட அணிகளில் முடிவடைவதுடன், சிறந்த அணிகள் தங்கள் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இறுதிக்கிண்ணத்திற்காக மோதவுள்ளன.

குறித்த காற்பந்தாட்டச்சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜுலை மாதம் பிரமாண்டமாக ஆரம்பிக்கவுள்ளதுடன், இதற்கு தேசிய மற்றும் சர்வதேச அனுசரணையாளர்கள் அனுசரணை வழங்குகின்றனர்.

லைக்கா குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான, அல்லிராஜா சுபாஸ்கரன் மற்றும் லைக்கா ஹெல்த்தின் தலைவர் பிரேமா சுபாஸ்கரன் ஆகியோரால் 2010 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட லைக்கா ஞானம் அறக்கட்டளையானது, இலங்கையின் இளைஞர் யுவதிகளை காற்பந்தாட்டத்துறையில் வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனத்துடன் தற்போது கைகோர்த்துள்ளது.

இச்செயற்றிட்டத்தின் ஊடாக லைக்கா ஞானம் அறக்கட்டளையானது அனைத்து சமூகத்தினருக்கும் காற்பந்து விளையாட்டை நீண்ட காலத்திற்கு ஊக்குவிப்பதற்கு உறுதிபூண்டுள்ளது.

லைகா ஞானம் அறக்கட்டளையானது, சுகாதாரம், கல்வி, விவசாயம், இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக மேம்பாடு போன்ற முக்கியமான துறைகளில் கவனம் செலுத்தி, அனைத்து மாவட்டங்களிலும் சமூக வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

குறித்த காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை நடத்துவதற்கு பிரதான பங்காளராக லைக்காவின் ஞானம் அறக்கட்டளை விளங்குவதுடன், ஊடக மற்றும் தனியார் அனுசரணை நிறுவனங்களும் இணைந்து கொண்டுள்ளன, என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# மருதமுனையில் “நீண்ட இருட்டு” கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

*மருதமுனையை சேர்ந்த கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் எழுதிய “நீண்ட இருட்டு” கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எம்.எச். பவுண்டேஷன் ஏற்பாட்டில் ஓய்வு பெற்ற வங்கியாளரும் கவிஞருமான ஏ.ஆர்.ஏ.சத்தார் தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் எஸ்.எம்.எம்.ஜெமீல் நினைவரங்கில் நேற்று (26) நடைபெற்றது.*

*நூல் நயவுரையை இலக்கிய விமர்சகர் ஜெஸ்மி எம் மூஸா மற்றும் கவிஞர் ஏ.எம்.குர்ஷித் ஆகியோர் நிகழ்த்தினர். சட்டத்தரணியும் சமுர்த்தி வங்கி முகாமையாளருமான எம்.எம். முஹம்மட் முபீன், எழுத்தாளர் எம்.எச்.ஏ. கரீம் அவர்களின் எழுத்துலக பிரவேசம் பற்றியும் மருதமுனை கிராமத்தின் சமகால எழுத்துக்கள் பற்றி கடந்த கால அனுபவக் குறிப்புகளுடன் விளக்கி உரையாற்றினார்.*



*முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், முன்னாள் உயர் நீதிமன்ற ஆணையாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ்.எம்.ஜெமீல் , உதவி பிரதேச செயலாளர் திருமதி அய்மா நிஃமத்துல்லா, கலாநிதி திருமதி மஸ்றூபா மஜீத், சிரேஷ்ட விரிவுரையாளர் எஃப்.எம். அஹமது அன்ஸார் மௌலானா, டொக்டர். முஜாஹித், டொக்டர்.எஸ்.எம்.தொகுத்தார், வர்த்தகர் ஏ.ஜே.நளீர் ஆகியோர் முதன்மை பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.*

*இந்த நிகழ்வில், அக்பர் ஜ/ம்ஆ பள்ளிவாசல் தலைவர் வை.எல்.அன்சார், வெண்ணிலா சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஏ.கப்பார், கவிஞர் மருதூர் மஃஜ/ன், கவிஞர் ஜமீல், ஆய்வாளர் ஏயெம் அம்றிதா, கவிஞர் றாபி, கவிஞர் முனாஸ், கவிஞர் டீன் கபூர், கவிஞர் முபாறக், கவிஞர் நௌபல், கவிஞர் மருதமுனையாளன் றபீக் , கவிதாயினி கவிநுட்பம் பாயிஸா, கவிஞர் மருதமுனை ஹஸன், போன்றோருடன் கவிஞர்கள் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.*

*ஏற்புரையை நூலாசிரியர் கவிஞர் எம்.எச்.ஏ.கரீம் நிகழ்த்தியதுடன் நிகழ்வுகளை கவிஞர் விஜிலி மூசா தொகுத்து வழங்கினார்.*



# வீதியோரங்களில் மரங்கள் சரிந்து விழுவதை கட்டுப்படுத்த தேசிய கொள்கையொன்றை வகுக்க வேண்டியது அவசியம்

## இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்

வீதியோரங்களில் அடிக்கடி மரங்கள் சரிந்து விழும் சம்பவங்கள் நடப்பதால், முறையான ஆய்வுகளுக்குப் பின்னர், வீதியோரங்களில் மரங்கள் நடுவது தொடர்பில் நிபுணர் குழுக்களின் ஆலோசனையுடன் தேசிய கொள்கையொன்று வகுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

தற்போதைய வானிலை நிலைமைகள் குறித்து அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இத்தருணத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், அரச திணைக்களங்கள், மாவட்ட ஆணையாளர் அலுவலகங்கள், பிரதேச செயலக அலுவலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிவாரண சேவை நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும்



இராணுவத்தினர் என அனைவரும் மேற்கொண்டு வருகின்ற துரித நடவடிக்கைகளை அமைச்சர் பாராட்டினார்.

இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், கடந்த காலங்களில் மரங்கள் சரிந்து விழுவது அதிகரித்துள்ளதாகவும், இதற்காக தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும், குறிப்பாக 'சுரக்கிமு' திட்டத்தின் கீழ், பாடசாலை மற்றும் பாடசாலை வளாகத்தில் மாணவர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், வீதி ஓரங்களில் மரங்கள் சரிந்து விழுவது அதிகரித்துள்ளதால், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அதிகாரசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆதரவுடன் இதனைக் கட்டுப்படுத்துவதற்கும், மரநடுகை தொடர்பான முறையான ஆய்வின் பின்னர் சிறப்புக் குழுவின் ஆலோசனையின் பேரில் இதற்கென தேசிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும் எனவும், அதற்கேற்ப வீதியின் இருபுறமும் நடுவதற்கு ஏற்ற மரங்கள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பாதுகாப்பற்ற மற்றும் அங்கீகரிக்கப்படாத நிர்மாண பணிகளால் தாழ்நிலங்களில் ஏற்படும் வெள்ள நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரெம-97)

# கன்சர்வேடிவ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கட்டாய தேசிய ராணுவ சேவையில் இளைஞர்கள்!

## பிரதமர் ரிஷி சுனக் உறுதி வழங்கினார்



'கன்சர்வேடிவ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கட்டாய தேசிய ராணுவ சேவையில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்' என்ற புதிய உறுதிமொழியை அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் வழங்கியுள்ளார்.

பிரிட்டனில் நாடாளுமன்றத் தேர்தல் ஜூலை 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதையொட்டி, பிரதமர் ரிஷி சுனக் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

"பிரிட்டனில் பெருமைகொள்வதற்கு அதிக விடயங்கள் உள்ளன. ஆனால், பிரிட்டன் இன்று மிகவும் ஆபத்தான மற்றும் பிளவுபட்ட எதிர்காலத்தை எதிர்கொள்கிறது. சமூகத்தில் இளைஞர்களுக்குத் தகுதியான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. மேலும், ஜனநாயகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது என்பதில் சந்தேகமில்லை.

அதனால், 18 வயதுடையவருக்கு தேசிய ராணுவ சேவையை நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அறிமுகப்படுத்துவோம். 12 மாதம் முழு நேரம் ராணுவ சேவைக்கான வாய்ப்பு அல்லது 12 மாதமும் வார இறுதியில் தன்னார்வத் தொண்டு செய்யும் வாய்ப்புக்கான திட்டம் வழங்கப்படும்.

இதன்மூலம் இளைஞர்கள் மதிப்புமிக்க திறன்களைப்பெறுவர். மேலும், இது பிரிட்டனைப் பாதுகாப்பாகவும் வலுவாகவும் மாற்றும்" என ரிஷி சுனக் தெரிவித்தார்.

ரிஷி சுனக்கின் புதிய உறுதிமொழி குறித்து தொழிலாளர் கட்சி வெளியிட்ட அறிக்கையில், 'பிரிட்டன் பொருளாதாரத்தைச் செயலிழக்கச் செய்த கன்சர்வேடிவ் கட்சியால் அறிவிக்கப்பட்ட மற்றொரு திட்டம் இதுவாகும்.. நமது ராணுவம் ஒரு காலத்தில் உலகமே போற்றப்படும் நிலையில் இருந்தது. ஆனால், கன்சர்வேடிவ் கட்சி நிதிப் பற்றாக்குறையால் ராணுவ வீரர்களைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 1947 ஆம் ஆண்டு 17 முதல் 21 வயதுடைய இளைஞர்கள் கட்டாயம் ராணுவப் படையில் 18 மாதங்கள் பணியாற்றுவதற்கான தேசிய ராணுவ சேவை திட்டம் அப்போது இருந்த கன்சர்வேட்டிவ் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1960 ஆம் ஆண்டு அந்தத் திட்டம் அரசால் நிறுத்தப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளான சுவீடன், நோர்வே மற்றும் டென்மார்க் நாடுகளில் இதுபோன்ற கட்டாய ராணுவ சேவைச் சட்டம் அமலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)



# பப்புவா நியூ கினியாவில் பயங்கர நிலச்சரிவு உயிரிழந்தவர் எண்ணிக்கை 670 ஆக எகிறியது!

பப்புவா நியூ கினியாவில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 670 ஆக அதிகரித்துள்ளது.

தெற்கு பசிபிக் கடலில் அமைந்த தீவு நாடான பப்புவா நியூ கினியாவின் எங்கா மாகாணத்தில் வெள்ளிக்கிழமை பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

இது தொடர்பாக ஐ.நா. சிறப்புத் திட்ட தலைவர் செர்ஹன் அக்தோபிராக் கூறுகையில், 'யம்பாலி கிராமத்தில் ஏற்பட்டுள்ள பலத்த சேதத்துடன், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 670 ஆக அதிகரித்துள்ளது. சுமார் 150 க்கும் மேற்பட்ட வீடுகளும் 2000க்கு மேற்பட்டவர்களும் நிலச்சரிவால் மண்ணுக்குள் புதைந்திருக்கலாம் என்று அதிகாரிகள் கருதுகின்றனர். தற்போதைய நிலைவரப்படி, 670 க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது' என்றார்.

மீட்புப் பணிகளுக்காக மண் தோண்டப்படும்போதும் நிலச்சரிவு தொடர்வதால், மீட்புப் படையினர் கடும் சவாலைச் சந்தித்து வருகின்றனர். இந்த நிலச்சரிவு, 21 ஆம் நூற்றாண்டின் மிக மோசமான நிலச்சரிவுகளில் ஒன்று எனக் கூறப்படுகிறது. (04)

# ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் மே.இ.தீவுகளின் ஜேசன் ஹோல்டர் இல்லை!

காயம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் ஜேசன் ஹோல்டர் எதிர்வரும் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடும் வாய்ப்பை இழந்துள்ளார்.

இதனால் அவருக்குப் பதிலாக இடது கை வேகப்பந்து வீச்சாளர் ஒபேத் மக்கோய்யை அணியில் இணைத்துக் கொள்ள அந்நாட்டு கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐசிசியின் ரி-20 உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் 4 நாட்கள் எஞ்சியுள்ள நிலையில், இம்முறை உலகக் கிண்ணத்தில் ஆடவுள்ள பெரும்பாலான அணிகள் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவிற்குச் சென்று பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.




இந்த நிலையில், நடப்பு ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் இடம்பிடித்த சகலதுறை வீரர் ஜேசன் ஹோல்டர் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் கவுண்டி நான்கு நாள் கிரிக்கெட் போட்டியின் போது ஹோல்டருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இம்முறை கவுண்டி போட்டியில் வொர்செஸ்டர்ஷையர் அணியை அவர் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

இதனிடையே, இது குறித்து மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், ஜேசன் ஹோல்டரின் காயம் குணமடைய எவ்வளவு காலம் எடுக்கும் என்பது குறித்த தகவல்கள் குறிப்பிடப்படவில்லை. (04)

# தொண்டு நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், அலிகம்பே பிரதேசத்தில் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றினால் சுமார் 25 மில்லியன் ஷரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் ஒன்று அப்பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதற்காக சுகாதாரத் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டிடத்தினை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ், அலிகம்பை கத்தோலிக்க தேவாலய அருட்தந்தை எஸ்.ஜெகநாதன், பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ். ஷாபி, பிராந்திய உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி பீ.அகிலன், பனங்காடு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் யூ.எல்.எம். சக்கீல் மற்றும் தொண்டு நிறுவனத்தினர் உள்ளிட்ட அப்பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அலிகம்பை பிரதேசத்தில் சுமார் 350 குடும்பங்கள் உள்ளன. போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளின்றி மிகவும் கஷ்டத்துடன் அங்குள்ள மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் அங்கு பனங்காடு வைத்தியசாலையினால் வாரத்தில் மூன்று நாட்கள் கிளினிக் நடத்தப்பட்டு வருகிறது. ஏனைய நாட்களில் அங்குள்ள மக்கள் அம்பாறை மற்றும் அக்கரைப்பற்று போன்ற தூரப் பிரதேச வைத்தியசாலைகளுக்குச் சென்றே சுகாதார சேவையினைப் பெற்று வருகின்றனர்.



அலிகம்பை கத்தோலிக்க தேவாலய அருட்தந்தை எஸ்.ஜெகநாதன், மற்றும் அங்குள்ள பொது நிறுவனங்கள் நிரந்தரமான வைத்தியசாலை ஒன்றினை அப்பிரதேசத்தில் நிர்மாணித்து தருமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுத்தும் வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் தொண்டு நிறுவனம் ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட கட்டிடம் ஒன்றும் அதற்குரிய தளபாடங்களும் சுகாதார திணைக்களத்திற்கு கிடைத்திருப்பது எதிர்காலத்தில் அங்கு நிரந்தரமான வைத்தியசாலை ஒன்றினை அமைப்பதற்கு பெரும் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது, என்று நிகழ்வில் கலந்துகொண்வர்கள் தெரிவித்தனர்.

அலிகம்பை பிரதேசத்தில் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் நலன் கருதி கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் எதிர்வரும் காலங்களில் வைத்தியசாலை ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தம்பலகாமத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வெசாக் விழா



(ஹஸ்பர் ஏ.எச்)

வெசாக் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் வெசாக் விழாவின் ஒரு பகுதியாக தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள 99 சிறீ சுதர்சனா ராம விகாரை, முள்ளிப்பொத்தானை சுவர்ணமாலி விகாரை, தம்பலகாமம் பிரதேச செயலகம் ஆகிய இடங்களில் 24,25 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், தம்பலகாமம் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியனவும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, இளைஞர் சேவைகள் அதிகாரி ஐ.ஜாபிர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பௌத்த மதக்குருக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் போதை ஒழிப்பு தொடர்பிலான விழிப்புணர்வு, தர்ம கலந்துரையாடல், பக்திப்பாடல் போன்றனவும் இடம்பெற்றதுடன் முள்ளிப்பொத்தானை நிகழ்வின் போது நூடில்ஸ் தன்சலும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுகளில் இளைஞர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# ஹலால் சான்றுறுதி பேரவையின் செயற்பாடுகள் மாளிகைக்காட்டில் நடந்த தெளிவூட்டல் கருத்தரங்கு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஹலால் சான்றுறுதிப் பேரவையின் செயற்பாடுகள் பற்றிய தெளிவூட்டல் கருத்தரங்கு, கடந்த வெள்ளிக்கிழமை (24)மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து மாளிகைக்காடு பாவா றோயல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் ஒத்துழைப்புடனும் ஹலால் சான்றுறுதிப் பேரவையின் அனுசரணையிலும் நடைபெற்ற இச்செயலமர்வில், சான்றுறுதிப் பேரவை சார்பாக அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகிப் வஹாப், ஹலால் விழிப்புணர்வுப் பொறுப்பாளர் உஸாமா சைத், உள்ளக ஷரீஆ பிரிவுத் தலைவரும் பிரதான வளவாளருமான அஷ்ஷெய்க் இர்பான் முபீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

“இலங்கையில்ஹலால்சான்றிதழ்வழங்கப்படுவதன் தேவையும் அதன் முக்கியத்துவமும்” எனும் தொனிப்பொருளில் அஷ்ஷெய்க் இர்பான் முபீன்-றஹ்மானி விளக்கமான உரையொன்றை நிகழ்த்தினார்.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர் கனி- ஹாமியின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் சூரி, மதனி, முன்னாள் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா - மதனி மற்றும் மாவட்ட சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், கிளைகளின் செயலாளர்கள், உலமாக்கள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், வர்த்தகர்கள், அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தரணிகள் என சமூகத்திலுள்ள பல்வேறு மட்டத்தினர் கலந்து பயன்பெற்றதோடு சந்தேகங்களுக்கான தீர்வுகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

# 2024 ஐ.பி.எல். தொடரை அதிரடியாக வென்றது கொல்கத்தா! இறுதிப்போட்டியில் ஹைதராபாத்தை இலகுவாக வீழ்த்தியது!!

ஐபிஎல் 2024 தொடரின் இறுதி ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.



நட்சத்திர வீரர்கள் ரஸல் - மிச்செல் ஸ்ட்ராக் ஆகியோரின் அசத்தல் பந்துவீச்சு, வெங்கடேஷ் ஐயரின் துடுப்பாட்டம் போன்றவற்றால் இந்த வெற்றி அந்த அணிக்கு இலகுவாகக் கிடைத்தது.

கடந்த மார்ச் மாதம் தொடங்கி நடைபெற்று வந்த ஐபிஎல் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னாள் சம்பியன்கள் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் இறுதி தகுதி பெற்றிருந்தன.

கொல்கத்தா அணியானது, குவாலிஃபயர் 1- இல் வென்றதின் மூலம் நேரடியாக இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

எலிமினேட்டரில் வென்று, குவாலிஃபயர் 2- இல் ராஜஸ்தானை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது ஹைதராபாத்.

ஹைதராபாத் அணியானது தொடரின் தொடக்க ஆட்டங்களில் முறையே 277, 287 என அதிக



ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்து, லீக் சுற்றில் முதலிடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது..

இரு அணிகளிலும் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்கள், சகல துறை வீரர்கள் இருந்ததால், இறுதி ஆட்டம் பரபரப்பாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் கப்டன் பட் கம்மின்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். ஏனெனில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆட்டங்களில் அந்த அணி பெற்ற வெற்றிகள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. அதேவேளை, கொல்கத்தா அணி - இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய போட்டிகளில் தனது பலத்தை சிறப்பாக வெளிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஹைதராபாத் அணியின் துடுப்பெடுத்தாட்ட வீரர்களை தமது அதிரடிப் பந்துவீச்சின் மூலம் தடுமாற வைத்தனர் கொல்கத்தா வீரர்கள்.

அபிஷேக் சர்மா 2 ஓட்டங்கள், எதிர்கொண்ட முதல் பந்திலேயே கோல்டன் டக்கான ட்ராவிஸ் ஹெட், அடுத்து வந்த ராகுல் திரிபாதியும் வெறும் 9 ஓட்டங்களுடன் விழா, 7 ஓவர்களில் 47 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தள்ளாடியது ஹைதராபாத்.

தடுமாறிக் கொண்டிருந்த ஹைதராபாத் அணிக்கு எய்டன் மார்க்ரம் - நிதிஷ் ரெட்டி இணை நம்பிக்கை தரும் வகையில் ஓட்டங்களை சேர்க்கத் தொடங்கினாலும், அவர்களாலும் அதிக நேரம் தாக்குப்பிடித்திட இயலவில்லை. கப்டன் பட் கம்மின்ஸ் நிலைத்து ஆட முயன்று 24 ஓட்டங்களை எடுத்தார். ஹைதராபாத் அணி 113 ஓட்டங்களுக்கு 18.3 ஓவர்களில் ஆட்டமிழந்தது.

கொல்கத்தா அணித் தரப்பில் ரஸல் 3, ஸ்ட்ராக் 2, ஹர்ஷித் ராணா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

114 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இறங்கிய கொல்கத்தா தரப்பில் ரஹ்மனுல்லா குர்பாஸ் - சுனில் நரைன் தொடக்க துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினார்.

சுனில் நரைன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அதன்பின் இணைந்த குர்பாஸ் - வெங்கடேஷ் ஐயர் இணை, சிரமமின்றி ஹைதராபாத் பந்துவீச்சை எதர்கொண்டு ஆடினார். 2 சிக்ஸர், 5 பவுண்டரியுடன் 32 பந்துகளில் 39 ஓட்டங்களை குர்பாஸ் எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அபாரமாக ஆடிய வெங்கடேஷ் ஐயர் 3 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 25 பந்துகளில்



51 ஓட்டங்களை விளாசி அரைச் சதத்தைப் பதிவு செய்தார். கப்டன் ஷ்ரேயஸ் ஐயர் 6 ஓட்டங்களுடன் களத்தில் நிற்க 10.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டுமிழந்து வெற்றி இலக்கான 114 ஐ ரன்களை எட்டியது கொல்கத்தா.

இதன் மூலம் ஹைதராபாதை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி 3 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தையும் வசப்படுத்தியது.

சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா அணிக்கு இந்திய மதிப்பில் ஷரூபா.20 கோடியும், ஹைதராபாத் அணிக்கு ரூபா.13.5 கோடியும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக மிச்செல் ஸ்ட்ராக்கும், தொடரின் நாயகனாக சுனில் நரைனும் தெரிவுசெய்யப்பட்டனர்.








## டெங்கு பரவும் அபாயம் குறித்து சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்

(நூருல் ஹுதா உமர்)

தொடர்ச்சியாக பெய்ய ஆரம்பித்துள்ள மழையை அடுத்து, சாய்ந்தமருது பிரதேசங்களில் டெங்கு நோய் வேகமாகப் பரவக்கூடிய அபாயகரமான நிலைமை காணப்படுவதாக எச்சரிக்கப்படுகிறது.

"மழை நீர் தேங்கி நின்று, நுளம்புகள் அதிகமாகி, டெங்கு நோயைப் பரப்பி வருகிறது. தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர்!

பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் தினமும் ஒரு 15 நிமிடங்களை நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள். அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள்!" என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று (25) சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கை கட்டுப்படுத்துவது தொடர்பில் கள விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்கு தகவல் வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரவித்தார்.

மேலும் அவர கூறுகையில், "பயன்படுத்தப்படாத வீடுகள், வெற்று வளவுகள் மற்றும் கட்டட நிர்மாணம் நடைபெறும் இடங்களிலும் அவதானம் செலுத்துங்கள். கிணறுகள் மற்றும் நீர்த்தாங்கிகளை நுளம்புகள் நுழையாத வண்ணம் நுளம்பு வலைகளினால் மூடுங்கள். வீட்டு மொட்டைமாடிகள் மற்றும் கூரைப் பீலிகளில் கரிசனை எடுங்கள். பாடசாலைகள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தலங்களின் பொறுப்புதாரிகள் இவ்விடயத்தில் அதிகம் சிரத்தை எடுங்கள்.

நுளம்புக் கடியிலிருந்து உங்களையும் பிள்ளைகளையும் பாதுகாருங்கள். இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அல்லது காய்ச்சல் குறைந்தும் உடலில் ஏதும் மாற்றங்கள் இருந்தாலும் இரத்தப் பரிசோதனைக்காக வைத்திய ஆலோசனையைப் பெறுங்கள். போதிய நீராகாரம் மற்றும் ஓய்வை உறுதி செய்யுங்கள்.

டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகருக்கு சுயமாகவே முன்சென்று ஒத்துழைப்பு வழங்குங்கள். டெங்கு நோய் மிகவும் ஆபத்தானது. உங்களின் பாதுகாப்பு உங்களின் கரங்களில்" என வலியுறுத்தியுள்ளார்.

அன்றைய டெங்கு கட்டுப்பாட்டுக் கள ஆய்வில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி, காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஏ.எல்.எம். ஜரீன், ஜே.எம்.நிஸ்தார், பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். அஸ்லம், டெங்கு கட்டுப்பாட்டு கள உதவியாளர்களான எம்.எஸ்.எம். நக்கீப், எம்.எஸ்.எம்.இஹ்ஜாஸ், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்காளான ரீ.மோகனஇராஸ், எம். எம். பிர்தௌஸ் என பலரும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2024இல் வெளியிடப்பெற்றது.